தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் சஎ	திருவள்ளுவர் யாண்டு உயஃச பிரமாதீச, புரட்டாசி (1973 — செப்டம்பர் — அக்டோபர்)	மலர் சா

சிறுபாணாற்றுப் படையில் — உவமைச் சிறப்பு

மு. வை. அரவிந்தன். எம் ஓ. எல்.,
தமிழ்த் துணைப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி,
வேலூர், வடஆர்க்காடு மாவட்டம்.

புலவர்கள் கையாளும் உவமைகள், அவர்களின் அறிவு நுட்பத்திற்கும். புலமைத் திறனுக்கும் ஏற்ப அமைகின்றன. அவர்கள் கண்ணின் கூர்மை, உள்ளத்தின் தெளிவு கருத்தின் ஆழம் - ஆகியவற்றிற்கு ஏற்ப, உவமைகள் பல வடிவங்கள் பெறுகின்றன. அவர்கள் வாழ்ந்த இடம், காலம், நாட்டின் வெப்பதட்ப நிலை - ஆகியவற்றின் அடிச்சுவடு உவமைகளில் நன்கு பதிகின்றன.

இலக்கியம் தோன்றிய நாள் முதலே இலக்கியம் பற்றிய ஆராய்ச்சியும் பிறந்தது என்னலாம். காலந்தோறும் இலக்கிய ஆராய்ச்சி, வெவ்வேறு நோக்கில் வளர்ந்து வந்துள்ளது. தொல்காப்பியர் தம் நூலில் - பொருளதிகாரத்தில் இலக்கிய ஆராய்ச்சியைப்பற்றி விரிவாகக் கூறியுள்ளார் உவமை இயலில், உவமைபற்றி ஆராய்ந்து பல முடிபுகளை அவர் வெளியிட்டுள்ளார்.

சங்க நூல்களை அறியத் தொல்காப்பியமே துணைபுரிகின்றது ஆதலின், உவமை இயலில் உவமை பற்றி அவர் கூறியுள்ள கருத்துக்களைக்கொண்டு, சிறுபாணாற்றுப்படையில் இடம் பெற்றுள்ள உவமைகளை ஆராய்வோம்.

நால்வகை உவமைகள்

தொல்காப்பியர், தொழில் பயன் வடிவம் வண்ணம் என்னும் நான்கு வகையில் உவமை தோன்றும் என்று கூறியுள்ளார்.

வினை பயன்மெய் உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமத் தோற்றம்,
(உவமை : 1)

சிறுபாணாற்றுப்படையில், மேலே கூறிய நால்வகை உவமைகளும் இடம் பெற்றுள்ளன.

நல்லியக்கோடனை, நத்தத்தனார் உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் (122) என்று குறிப்பிடுகின்றார் 'பெரிய புலி போலும் வன்மை உடையவன்' - என்று கூறி; அவனது செயலைச் சிறப்பிக்கின்றார். செயலின் மூலமாகவே வலிமை வெளிப்படும் ஆதலின், இதனை வினை உவமம் என்னலாம்

நல்லியக்கோடன், பாணர்களுக்கு நல்கிய தேறல், 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' (337) என்று சிறப்பிக்கப்படுகின்றது 'பாம்பு வெகுண்டு கடித்தவுடன், நஞ்சு தலைக்கு ஏறி மயக்குவது போல மயக்கும் தேறல்' என்று பாணர்கள் தாம் உண்டு மகிழ்ந்த தேறலைப் புகழ்கின்றனர். இது பயன் உவமமாகும்.

நத்தத்தனார், தாம் கண்ட பொருளின் வடிவத்திற்கு ஏற்ற உவமையைக் கூறுவதில் வல்லவராய் விளங்குகின்றார். யாழின் நரம்புக்குப் பொற்கம்பியையும் (34), கேணியில் பூத்துள்ள மலரின் இதழ் நுனிக்கு வேலின் நுனியையும் (173), தொடக்கத்தில் பருத்து, வரவரச் சிறுத்து, திரண்டு மகளிரின் முதுகுப் புறத்தில் தொங்கும் மயிர்ப் பின்னலுக்குப் பெண் யானையின் கையினையும் (191) கிளிஞ்சலின் ஓரத்திற்கு வாளின் ஓரத்தையும் (58) உவமை கூறுகின்றார் கவிஞர். உவமையும் பொருளும் ஒத்து, எண்ணுந்தோறும் இன்பமூட்டுகின்றன.

வண்ணங்களை ஒப்பிட்டு நோக்கும் கூரிய பார்வையும் நத்தத்தனாரிடம் உண்டு சீறியாழில் பத்தரின் மேல் மூடியிருக்கும் தோலின் செந்நிறத்திற்குக், குமிழம் பழத்தின் நிறத்தை உவமையாகக் கூறுகின்றார் அவர் (224, 5) காட்டில் பழுக்கும் குமிழம் பழத்தின் மேல் ஓடு, சிவப்பாய்க் கண்ணைக் கவரும் வனப்

போடு விளங்குகின்றது. யாழின் பத்தரை மூடியுள்ள போர்வையை இன்று காண நமக்கு வாய்ப்பு இல்லை. எனினும் உவமையால் பொருளை உய்த்துணர முடிகின்றது.

செவ்வண்ணத்தை மற்றோர் இடத்திலும் சிறப்பாக ஒப்பிட்டு நம்மை மகிழவைக்கின்றார் புலவர். நல்லியக்கோடன் பாணர்களுக்குப் பரிசிலாக வழங்கிய தேரைப் புகழும்போது, தேர்த் தட்டின் வெளிப்புறம் மறையுமாறு மூடப் பட்ட பலகையின் நிறத்திற்குச் சிறப்பான உவமை கூறுகின்றார். அப் பலகை சாதிலிங்கத்தை உருக்கி வார்த்து நிறம் ஊட்டப்பட்டுள்ளது. சாதிலிங்கம் பூசிய பலகையின் வண்ணத்திற்கு, மலர்ந்த முள் முருக்கம் பூங்கொத்தின் வண்ணத்தை உவமையாகக் கூறுகின்றார். (254 - 6)

செவ்வண்ணம் உவமையால் பொலிவு பெற்றதைப் போலவே, வெள்ளை நிறமும் சிறப்புப் பெறுகின்றது. நல்லியக்கோடன் வழங்கிய மாசற்ற வெள்ளை நிற ஆடைக்கு, மூங்கிலின் உள்ளே இருக்கும் வெள்ளிய ஆடையை உவமையாகக் கூறுகின்றார் (236) மாசுமறுவற்று, மக்களின் கை படாமல், தூய்மையாகப் பொலியும் மூங்கில் ஆடையின் உயர்வு எண்ணி மகிழத்தக்கதாகும்.

விரவி வந்த உவமைகள்

முன்னர்க் கூறிய நான்குவகை உவமைகளும் தனித்தனியே வருவதோடு, கலந்தும் வருவதுண்டு.

"விரவியும் வரூஉம் மரபின என்ப" (உவ. 2) என்பது தொல்காப்பியர் வாக்கு விரவிவந்த உவமைகள் சிறுபாணாற்றுப் படையில் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

அகில் மரம் ஒன்றை, ஆற்று வெள்ளம் சுமந்து வந்து கடலில் சேர்க்கின்றது வேரும் கிளையுமாய் ஆற்றில் மிதந்து வந்த அம் மரம் அலைப்புண்டு ஒடிந்து சிதைந்து கடல் அலையில் புரண்டு மெல்ல மெல்லக் கரையை அடைகின்றது. கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கும் மரத்தை நத்தத்தனார் நோக்குகின்றார். அம் மரத்தின் தோற்றம் உறங்குகின்ற ஒட்டகத்தை அவருக்கு நினைவூட்டுகின்றது. நீண்ட கழுத்தை ஒரு பக்கம்சாய்த்து, மெலிந்த கால்களை மடக்கிக் கொண்டு மேடு பள்ளமான திமிலோடு ஓய்ந்து உறங்கும் ஒட்டகம். அம் மரத்திற்கு ஏற்ற உவமை என்று உணர்கின்றார் கவிஞர். நீரில் மிதந்து, செம்

மண் படிந்து சாக்காடு பட்டு, வேரும் கிளையும் சிதைந்து கரையோரம் ஒதுங்கிக் கிடக்கும் மரம் ஏற்ற உமவையோடு பாட்டில் பின் வருமாறு அமைகின்றது.

ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரை மரம் (154, 5).

குளத்தில் மலர்ந்துள்ள வெண்டாமரை மலரை நாடி வந்து. பல கரு வண்டுகள் மொய்க்கின்றன. இக்காட்சி கவிஞரின் உள்ளத்தைக் கவர்கின்றது. வெண் மலரில் மொய்த்துள்ள கருவண்டுகள், முழு வெண்மதியைச் சேர்ந்துள்ள கருப்பைக் கவிஞருக்கு நினைவூட்டுகின்றன. அவர்,

முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாள்போது
கொங்குகவர் நீலச் செங்கண் சேவல்
மதிசேர் அரவின் மாணத் தோன்றும்
(183 - 5)

என்று பாடித் தம் கருத்தை வெளியிடுகின்றார்.

நல்லியக்கோடனின், அரண்மனை வாயிலில் உள்ள கதவு திறந்திருக்கின்றது. ஓங்கி உயர்ந்த மதில், அதன்கண் இருக்கும் பெரிய வாயில், வாயிலில் உள்ள திறந்த கதவு - இவை எல்லாம் புலவரின் கற்பனையைத் தூண்டுகின்றன 'மேருமலை ஒரு கண்ணை விழித்துப் பார்ப்பது போன்ற அடையாத வாயில்' - என்று தகுந்த உவமையோடு அடையா வாயிலைப் பாடுகின்றார் (206).

பாம்பைக் கையில் பிடித்துக் கொண்டு, துன்புற்ற குரங்கை எங்கேயோ நத்தத்தனார் கண்டிருக்கின்றார். அக் காட்சி ஓர் உவமையாய் வெளிப்படுகின்றது பாம்பைப் பிடித்த குரங்கு பட்ட பாட்டை விரிவாகப் பாட அவருக்கு வாய்ப்பு இல்லை பாம்பை இறுகப் பிடித்து மூடிய விரல்கள், வளைந்து வளைந்து சுற்றும் பாம்பு, அப் பாம்பு சுற்றிய முழங்கை ஆகியவற்றை மட்டும் உவமையில் வைத்து மகிழ்கின்றார் அவர்.

பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன
அங்கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவு
(221, 2)

என்று யாழின் முன் பகுதிக்கு ஏற்ற உவமை கூறுகின்றார் குரங்குக் கையின் முட்டி, யாழ்த்தண்டின் குவிந்து திரண்ட

முன் புறத்திற்கும்; குரங்கின் முழங்கை தண்டிற்கும்: வளைந்து வளைந்து சுற்றிய பாம்பு, வார்க் கட்டுகளுக்கும் பொருத்தமான உவமைகளாகின்றன

நல்லியக்கோடன் பாணர்களுக்கு வழங்கும் தேர். புலவர் நினைவில் நன்கு இடம் பெற்றுள்ளது தேர்ச் சக்கரம் சிறந்த உவமைகளோடு புலவர் வாக்கில் பொலிகின்றது.

கூதிர் காலத்தில் - மழை முகில் அங்கும் இங்கும் விட்டு விட்டு விளங்கும் வானத்தில், வெண்மதி தண் கதிர் பரப்பி மண்டிலமிட்டுத் தோன்றும் தோற்றத்தைப் புலவர். தேர்ச்சக்கரத்திற்கு ஒப்பிட்டு மகிழ்கின்றார் (250 - 253). அச்சுக் கோக்கும் உறுப்பாகிய குடம், முழு வெண் திங்களுக்கும்; மதி உமிழும் ஒளிக் கதிர்கள், ஆரைக்கால்களுக்கும்: திங்களைச் சூழ்ந்துள்ள மண்டிலம், தேர்ச் சக்கரத்தின் வட்டைக்கும் சிறந்த உவமைகளாகின்றன.

நல்லியக்கோடன், சிரித்து மகிழும் இனியவர் பலர் நடுவே வீற்றிருக்கின்றான். இக் காட்சி, திங்கள் சுடர்மீன் கூட்டத்தின் நடுவே விளங்குவதைப் புலவர்க்கு நினைவூட்டுகின்றது.

பன்மீன் நடுவண் பான்மதி போல
இன்னகை ஆயமொடு இருந்தோன். (219. 20)

என்று அவர் பாடுகின்றார். சிறிதும் பெரிதுமாய் மின்னிப் பொலியும் விண்மீன் கூட்டம், ஒளி படைத்த கண்ணோ, வெண் பல் இலங்கச் சிரித்து மகிழும் ஆயத்திற்கு ஏற்ற உவமையாகின்றது. முழுவெண்மதி, அன்பும் பண்பும் நிறைந்து இனியனாய் விளங்கும் நல்லியக்கோடனுக்குப் பொருத்தமான உவமையாகின்றது.

மிகப்பெரிய பொருள் ஒன்றைக் காட்ட அதன் ஒரு பகுதியை மட்டும் எழுதி, அதன் முழு வடிவகதைக் காண்பவரே உய்த்துணருமாறு அமைப்பது ஓவியர்கள் கையாளும் மரபு. இம் மரபை இலக்கியக் கலைஞர்களும் கையாளுகின்றனர். நத்தத்தனார், பேயின் வடிவத்தை விளக்க அதன் உறுப்புக்கள் சிலவற்றை மட்டும் காட்டிப் பேயின் தோற்றத்தை நாமே உய்த்துணருமாறு அமைக்கின்றார். அவர் பேய்மகளை.

எரிமறிந் தன்ன நாவின் இலங்கு எயிற்றுக்
கருமறிக் காதின், கவையடிப் பேய்மகள் (196, 7)

என்று குறிப்பிடுகின்றார். மேல் நோக்கி எரிகின்ற பெருந்தீ சாய்ந்ததைப்போல, பேயின் நாக்கு உள்ளதாம். கொழுந்து விட்டு எரியும் பெருந்தீ நுனியில் குறுகியும், கீழே வர வர அகன்றும் இருக்கும். பெருநதீ, கீழ்நோக்கிச் சாய்ந்ததுபோல - என்ற உவமை. பேயின் பெரிய - சிவந்த - கீழே தொங்குகின்ற நாக்கிற்கு ஏற்றதாய் உள்ளது. அதன் காதுகள் வெள்ளாட்டின் காதுகள் போல நீண்டு, கறுத்துத் தொங்குகின்றனவாம். இவற்றோடு பளபளக்கும் பல்; கிளையாகப் பிரிந்த அடி ஆகியவற்றையும் கூறிப் பேயின் தோற்றத்தை நம் கண்முன் கொண்டுவருகின்றார் கவிஞர்.

உவமையால் விளக்கப்பட்ட பேய், வேறொரு பொருளை விளக்க உவமையாகின்றது. நல்லியக்கோடனது தலைநகரின் தெருவில், போர்க் களிறு உலவுகின்றது. அதன் கால்கள், போர்க் களத்தில் பகைவரை மிதித்துச் சிவந்திருக்கின்றன. காலில் உள்ள நகங்களிலும் குருதி படிந்துள்ளது. இத் தோற்றம் கவிஞரின் கற்பனையைத் தூண்டுகின்றது. பச்சை ஊனைத் தின்ற பேய். தன் அகன்ற வாயைத் திறந்து, குருதி படிந்த பெரும் பற்கள் தெரியும்படி சிரிப்பதுபோல - குருதி படிந்த, பெரிய நகங்களை உடைய, யானையின அடி தோன்றுகின்றது என்று கவிஞர் பாடுகின்றார்.

> இலங்கு எயிற்றுப் ... பேய்மகள்
> நிணன் உண்டு சிரித்த தோற்றம் போல,
> பிணன் உகைக்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
> அண்ணல் யானை. (196 - 200)

என்ற அடிகள் கற்போர் நெஞ்சத்திற்கு உவகை ஊட்டுகின்றன,

பொருளையே உவமர் செய்தல்

உவமை, பொருளைவிட, உயர்ந்ததாய் இருக்கவேண்டும். அவ்வாறு உவமை இருந்தால்தான், கற்போர்க்குப் பொருளின் தன்மை தெளிவாக விளங்கும், இதனால்தான் தொல்காப்பியர்

> உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை (உவமை: 3)

என்று உவமையைப் பற்றிக் கூறியுள்ளார்.

உவமையின் சிறப்பை நன்கு உணர்ந்த புலவர்கள், பொருளையே உவமையாக்கிச் சிறப்பித்தனர். அவ்வாறு செய்யினும் அது சிறந்த உவமையாகவே கருதப்படும்:

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமம் ஆகும்
(உவமை : 9)

என்பது தொல்காப்பியர் கருத்து. இதற்கு உரை எழுதும் போது பேராசிரியர், சிறுபாணாற்றுப் படையிலிருந்து இரண்டு அடிகளை (72 3) எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குகின்றார்

உமணரின் உப்பு வண்டியில் செல்லும் மந்தியை, மகாரன்ன மந்தி (56) என்றும்; முத்தை, பெண்களின் பற்களை ஒத்த முத்து (57) என்றும் நத்தத்தனர் கூறிப் பொருளையே உவமையாக்கியுள்ளார்.

இயற்கைக் காட்சிகளைப் பாடும் இடங்களில், அடிதோறும் விழுமிய உவமைகளைக் கூறிக் கற்போர் உள்ளத்தில், அக் காட்சி என்றும் நின்று நிலவுமாறு செய்கின்றார். மருத நிலக் காட்சியைப் பாடும்போது பொருளையே உவமையாக்கி இன்புறுகின்றார் ஓவியம் போன்ற (பொய்கைத்) துறை. இந்திர கோபப் பூச்சி போன்ற (கடம்ப மலர் சிந்திய) செந்தாது, நகில் போன்ற (தாமரை) மொட்டு, முகம் போன்ற (தாமரை) மலர். அரக்கு ஊட்டிய அங்கை போன்ற (தாமரை மலரின்) இதழ் (70-74) என்று அடிதோறுந் நத்தத்தனர் உவமைகள் கூறுகின்றார்.

பொருளையே உவமையாக்கி மகிழும் நத்தத்தனர், நெய்தல் நிலக் காட்சியைப் பாடும்போது வேறு ஒரு புதுமையைக் கையாளுகின்றார் பொருளையும் உவமையையும் ஒன்றாகவே ஆக்கிவிடுகின்றார் 'தாழை, அன்னம் பூத்துள்ளது செருந்தி பூத்து, பொன் என்று மருட்டுகின்றது. முண்டகம், கதிர் மணியைக் கழற்றுகின்றது. புன்னை, நித்திலம் வைத்துள்ளது' — என்று கூறித் திளைக்கின்றார் (146 — 151)

முல்லை நிலக் காட்சியைப் பாடும்போதும் நத்தத்தனர் பொருளையும் உவமையையும் ஒன்றாக ஆக்கிவிடுகின்றார். "முல்லை நிலத்தில், அவரைக் கொடி பவழம் கோத்து விளங்குகின்றது. காயா, மயிலின் கழுத்தாக மலர்ந்துள்ளது முசுண்டைக் கொடி, (பனை ஓலையால் செய்த) கொட்டம் கொண்டுள்ளது. காந்தளின் பூக்குலை, கை விரல்களைப் பூத்துள்ளது" என்று பாடி மகிழ்கின்றார் அவர் (164 — 169).

குறிஞ்சி நிலக் காட்சியில் உள்ள ஓர் உவமை கற்கும் தோறும் புதிய உணர்ச்சி ஊட்டி மகிழ்விக்கின்றது நல்லியக் கோடனுக்குரிய மலையின்' உச்சியில் வெண்முகில் அங்கும் இங்கும் விட்டு விட்டுத் தோன்றி, கவிந்தும் குவிந்தும் உலவுகின்றது. முகிலைக் கண்டதும் தோகை மயில்கள் மகிழ்கின்றன; தம் நீலமணித் தோகையை மஞ்சிடையே பரப்பி ஆடுகின்றன. இக்காட்சி, நத்தத்தனாரின் புலமைக்கு விருந்தளித்து. சிறந்த உவமையோடு கவிதையாய் வெளிப்படுகின்றது:

...... துளங்கியல் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்
மணிமயில். கலாபம் மஞ்சிடை பரப்பி,
துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோடு
(262—65)

என்பதே அக் கவிதை. 'மகளிர், தம் கூந்தலுக்கு அகில் புகை யூட்ட விரிந்த அழகிய மெல்லிய கூந்தலைப்போல' — என்ற உவமை எண்ணி மகிழத்தக்கது. மகளிர் மயிலுக்கு உவமையாகின்றனர். விரிந்த கருங்குழல், மயிலின் தோகைக்கும்; அகிற்புகை, மஞ்சிற்கும் பொருத்தமான உவமைகளாகின்றன.

பொருளையே உவமையாக்கிப் பாடுவது நத்தத்தனாரின் தனிப் பண்பாக உள்ளது. ஒரே வகையான உவமைகளை இலக்கியங்களில் கற்றுக் களைத்தவர்களுக்கு, நத்தத்தனார் கூறும் இவ்வுவமைகள் புதியவையாய்த் தோன்றிச் சுவையூட்டும்.

மாலை உவமம்

பொருளையே உவமையாக்கிப் பாடுவதில் தனி ஆர்வம் காட்டும் நத்தத்தனர். பாணர்களுடன் வரும் விறலியரின் தோற்றப் பொலிவைப் பாடும்போதும், தமது ஆர்வத்தைக் காட்டுகின்றார்: பொருளையே உவமையாக்கி உவக்கின்றார். உவமைகள் மாலை போலத் தொடர்ச்சியாய் ஒன்றன்பின் ஒன்றாய் அமைந்து இன்பமூட்டுகின்றன.

ஐதுவீழ் இகுபெயல் அழகுகொண்டு அருளி
நெய்கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில் மயிற் குளிக்கும்: சாஅய்
உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ
வயங்கிழை உலறிய அடியின்; அடிதொடர்ந்து

ஈர்ந்து நிலம் தோயும் இரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துடன் செறிந்த குறங்கின்: குறங்கென
மால்வரை ஒழுகிய வாழை: வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி; ஓதி
நளிச்சினை வேங்கை நாள்மலர் நச்சி
களிச் சுரும்பு அரற்றும் சுணங்கின்: சுணங்கு பிதிர்ந்து
யாணர்க்கோங்கின் அலர்முகை எள்ளி
பூணகத்து ஒடுங்கிய வெம்முலை: முலைஎன
வன்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சேறு இகுதரும் எயிற்றின்: எயிறென
குல்லையம் புறவில் குவிமுகை அவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின்: மெல்லியல்:
மடமான் நோக்கின் வாணுதல் விறலியர் (13—31).

என்று விறலியரின் அழகை நத்தத்தனார் பாடுகின்றார். இப் பகுதி, கற்றோர் நெஞ்சங்களை எல்லாம் பிணித்து, நினைவில் நிலைத்து நின்றுள்ளது. பேராசிரியர், இப் பகுதியிலிருந்து சில அடிகளை (19 — 23) எடுத்துக்காட்டி, இவை உவமைக்கு உவமையாக வந்தவை (அடுக்கிய தோற்றம்) அல்ல என்று விளக்கியுள்ளார் (உவமை: 38). தண்டியலங்கார உரையாசிரியர் சில அடிகளைச் (19 — 28) சந்தான உவமைக்கு எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார். மேலும், 'இதனை மாலை உவமம் எனினும் அமையும்' என்றும் கூறியுள்ளார் (பொருள் அணி-13). மாறன் அலங்கார உரையாசிரியர் அந்தாதி உவமைக்குச் சில அடிகளை (19 - 22)க் காட்டியுள்ளார்.

விறலியரைப் புனையும் பத்தொன்பது அடிகளில் பதின் மூன்று உவமைகளைப் புலவர் அமைத்துள்ளார். அவற்றுள் ஐந்து, பொருளே உவமையாகி வந்தவையாய் உள்ளன. நத்தத்தனார், பொருள் உவமையை வென்று விளங்குவதை எக்களிப்போடு பாடுகின்றார். இப்பகுதியில் உள்ள உவமைகள் பல முறை எண்ணி எண்ணி இன்புறத் தக்கவை. உரையாலோ, விளக்கத்தாலோ, புலவர் கருத்தைத் திரட்டித்தர முடியாத பகுதி இது. இதில் உள்ள கற்பனையும் உணர்ச்சியும் என்றும் புதியனவாகவே இருக்கும்; கற்கும் தோறும் புதுப் புது வகையாய் இனித்துப் புலமைக்கு விருந்து நல்கும். பொன்னும் மணியும் முத்தும் பவழமும் ஓரிடத்தில் குவிந்து கிடந்து, காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, தணியாத வேட்கையை உண்டாக்குவது போல, இவ்வுவமைக் குவியல் கற்போரைப் பேரின்பத்தில் ஆழ்த்துகின்றது.

(தொடரும்)

மாணவர் கவிதை – ஒரு மதிப்பீடு

அ பாலருவாயன். எம். ஏ ,
அ. வ. அ கல்லூரி, மாயூரம்.

உணர்ச்சியில் உருவெடுப்பது கவிதை. அந்த உணர்ச்சி மக்கள் உலகில் பொதுவானதாகவும், போற்றக் கூடியதாகவும் இருத்தலே நன்று. பல திறப்பட்ட உணர்ச்சிகளில் பாடும் கவிஞர்கள் வரலாற்றில் இடம் பிடித்துக் கொள்ளுதல் இதனுலேயே. எனினும் 'இந்த உணர்ச்சிக்கு இவன் பாட்டே எடுத்துக் காட்டு'' என்ற ஒரு மரபும் தமிழ்நாட்டில் இல்லாமலில்லை. குறிஞ்சி என்ருல் கபிலரும், பாலை என்ருல், பெருங்கடுங்கோவும் என்ற வழக்காறு நாம் அறியாததன்று. வெண்பாவிற் புகழேந்தி என்ற தனிப்பாடலோ இந்த யாப்பிற்கு வல்லவனும் இவனே என்று புதுச்சட்டமே போட்டுப் பார்க்கிறது.

ஆயினும் கவிஞர்கள் மரபும், தலைமுறையும் தொடர்ந்து கொண்டே யிருப்பதை நாம் மறக்க முடியாது மனிதனுடைய நோக்கங்கள் உள்ளவரை, உணர்ச்சிகள் உயிர் பெற்றிருக்கும் வரை இந்தக் கவிதைத் துறையும் நிலை பெற்றிருக்கும். ஒருவன் வாழ்வில் அமைதியைக் கொடுக்கின்ற இந்தத் துறையைக் காலம் அவ்வளவு எளிதில் சூறையாடி விட முடியாது. அது மட்டுமல்ல. ஆக்கிய கவிஞனுக்கு உள்ள அதே மனப்பாங்கினை எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒருவன் படித்து இன்புறும் இந்த மாய உறவைக் கவிதை என்ற ஒன்றே செய்துகாட்ட முடியும் இந்த உறவிற்குக் காலம், இடம், வசதி தேவையில்லை. எங்கோ என்றோ பாடப்பட்ட நம் தமிழ் இலக்கியங்கள் அன்றைய வாழ்வைப் படம் பிடித்துக் காட்ட வில்லையா? அப்படிக் காட்டுவன தாம் சிறந்தவை என்பதும் உண்மை.

எனவே கவிதையினுடைய இன்றியமையாமை பற்றி நாம் விளக்கிக் கூறத் தேவையில்லை. மொழி வளர்ச்சியினுடைய அங்கமாக மட்டுமன்றி வாழ்வோடும் ஒன்றிவிட்ட அங்கமாக இக் கவிதைத் துறை நம்மிடையே இருந்து வருகிறது. இன்றைய பரபரப்பான வாழ்விலும் இது முன்னே பெற்றிருந்த உயிர்ப்பு நிலையோடு இருந்து வருவதிலிருந்தே இதன் இளமை, வலிமைகளை அறியலாம். மேடையில் கவியரங்கங்கள் நிரம்பப் பெருகும் இந்த நாட்களில் கவிதை வளர்ச்சியைக் கண்கூடாகக்

காணுகின்றோம். எனினும் அந்தக் கவிதைகள் நீண்ட ஆயுளோடு இருக்குமெனக் கூறுவதற்கில்லை. ஒரு மகிழ்வுக்குரிய செய்தி என்னவெனில் இன்றைய மாணவர்களுக்கு உண்மையிலேயே இதில் நாட்டம் இருந்து கொண்டிருக்கிறது என்பதொன்றே! எதிர்காலப் போக்கில் இசைப் போர்வையோடு அறப ஆயுள் பெற்றுலவும் திரைப் பாடல்களே தமிழில் மலியுமோ என்ற பேரச்சத்தை இக்கால மாணவர் கவியுள்ளம் போக்க முற்பட்டிருப்பது மகிழ்ச்சிதரும் செய்தியாகும். அவர்களது போக்கில் பழமையும், புதுமையும் பின்னிப் பிணைவதை வரவேற்காமல் இருக்க முடியவில்லை. அவர்களது கவிதை நடைக்கு நல்ல புகலிடமாக அவ்வவர் கல்லூரி மலர்கள் ஆண்டுதோறும் அமைந்து வருகின்றன. குறிப்பிட்டவரது கவிதை. குறிப்பிட்ட நாள் பற்றிய கவிதை, குறிப்பிட்ட வரம்பில்லாக் கவிதை இவற்றையே வெளியிட்டு வரும் நாளிதழ், வார இதழ் போன்றவற்றின் செயல் போலன்றிக் கல்லூரியில் வன்மைத் தரம் மதிப்பிடப் படுவதால் அங்கே விளையும் கவிஞர்களின் உள்ளமும், கொள்கையும் நன்கு தெளிவாகின்றன நமக்கு

இன்றைய நாளில் தம்மை உலகுக்கு எவ்வாறேனும் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நம்மிடையே புகுந்துவிட்டது. பல வழிகளில்-கவிதைத் தொகுப்பை வெளியிட்டு அரசியல் தலைவரது அணிந்துரை பெற்றுச் சிறப்பது மலிகின்றது என்ற ஒன்றும் என்பதைச் சொல்வதில் தவறில்லை, இது போன்றின்றி எந்தப் பற்றும், எந்தக் கவலையும் இன்றிப் பாடியவர்கள் நம் பழம் புலவர்கள். அந்த உண்மை நிலை — நடுவு நிலை — இன்று மாணவர்களிடையில் தான் உள்ளது அவர்கள் நினைப்பதை அப்படியே எழுதுகின்றார்கள். அந்த எழுத்துக்களில் பொய்ம்மையில்லை: கட்டு இல்லை எனவே அவர்கள் உணர்ச்சியையும், எழுத்துக்களையும் மதிப்பது வேண்டும் நம் எண்ணங்களோடு அந்த இளம் உள்ளங்கள் ஒத்து வருகின்றன என்கிறபோது நம்மால் மகிழாமல் இருக்க முடியவில்லை.

தமிழகக் கல்லூரி மாணவர்களது நோக்கங்கள் இன்று உயர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன என்பதற்கு அவர்களது கவிதைகளே நல்ல சான்று. உள்ளத்தை மறைத்து உரையாடலாம். ஆனால் கவிதை எழுத முடியாது ஏனெனில் கவிதைக்குள் உண்மையுள்ளம் எப்படியும் பொதிந்துவிடும். மேலும் என்ன எழுதலாம் என்று நினைக்கும் கவிஞர்களது மனம் அசைபோடுவது அவர்களது கொள்கைகளையே! எனவே கவி

ஞன் கூற்றுப் பொய்த்திடாது. அந்த நம்பிக்கையில் சில பிஞ்சு நெஞ்சங்களது கவிதைகளைக் கண்டு மகிழ்வோம்!

இளைஞர்கள் என்றாலே புதுமையும், புரட்சியும் நாடுபவர்கள்: அவர்களுக்குப் பழமை நாட்டம் இல்லை என்ற கருத்தை இங்கே ஒருவர் மறுக்கிறார். கார் காலத்தைப் பாட வருகிறார் இக்கவிஞர். தலைவியின் பிரிவுத் துயரைச் சுட்ட வேண்டிய கட்டாயம் இவருக்கு தோழி கூற்றாகவே பாடவேண்டும் என்ற இவர் கருத்திற்கேற்ப அக்காலத்து நிகழ்ச்சிகளைச் சொல்லியே கவிதை புனைகிறார்.

தோழியும், தலைவியும் சிறந்த அறிவாளிகள். எனவே தோழி தலைவிக்குக் கூறும் கூற்றில். "காயாம் பூ பூத்து, வண்டுகள் இசைபாட, ஆண்மானும், பெண்மானும் இணைந்துமேய, வெய்யோனது வெம்மை தணிய மேகம் வானில் கவிய கார் காலம் வந்துவிட்டது: தலைவன் வருவான்" என்று தேற்றுவதாக அமைக்கிறார். இணைந்திருக்கும் மான்களை, மலர்நாடும் வண்டு இவை உன்னை நினைப்பிக்கும் தலைவனுக்கு என்பதை நாகரிகமாகச் சொல்லும் தோழி கூற்றுப் பாடல் இதோ:

"காயா முகிழ்ப்ப வண்டியாழ் முரல
பிணையோ டிரலை பசும்புல் கறிப்ப
வெய்யோன் விரிகதிர் செய்துயர் நீங்கக்
கார்முகில் நெடுவான் கவிந்தன
வருவார் தோழி வாய்மொழி யவரே!'

— K. இராசேந்திரன், விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

ஏதோ சங்க இலக்கியப் பாடலது நடையும், கற்பனையும் அமைந்துள்ள கவிதையை இவ்விளைய உள்ளம் பிரதிபலிக்கின்றது. இயல்பான இக்கால மொழி நடையை விட்டுத்தான் இந்த நாகரிகப் போக்கு வருமென்பதில்லை. இன்றைய மொழியாட்சியில் உள்ள சொற்களிலும் நாகரிகமாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதை

"ஓடைக் கரையின் ஓரத்திலே — அவள்
ஊடிப் பிணங்கும் வேளையிலே
வாடைக் காற்றின் முயக்கினிலே — அவள்
வண்ணக் கவிதை மயக்கினிலே

ஓடிப் பறக்கும் ஊடலெல்லாம் — புது
உவகை பிறக்கும் பாடலெல்லாம்
பாடிப் பறக்கத் துணைவருவாள் — உளப்
பசிகள் தீர உணவிடுவாள்''
— கோ இராசேந்திரன், மன்னர் கல்லூரி,
புதுக்கோட்டை

என்ற சந்தத்தில் பாடிக் காட்டுகிறுர் இவர். தன் உள்ளத்திலெழும் காதல் வேகத்தைப் 'பசி' என்று சொல்லி, அதற்கு 'உணவிடுவாள்' என்று பாமர மக்களும் புரிந்து கொள்ளும நிலையில் பாடுகின்ற இவரது உள்ளம். புனிதமான காதல் உணர்ச்சியைக் கடைச் சரக்காக்கிப் பாடும் கவிஞர்களது உள்ளங்களை விட எவ்வளவோ உயர்ந்து விடுகிறது!

இன்றைய தமிழ்ப் பண்பாடு ஓரளவு காப்பாற்றப்படுவது நம் பெண்ணினத்தாலேயே! ஆயின் கல்லூரிக் கல்வி வரை ஆண்களோடு போட்டி போடும் பெண்கள், சமுதாய உரிமைகளைத் தாமே பங்கு போட்டுக் கொள்வதைத் தடைசெய்ய முடியவில்லை. உரிமைக்கும், பண்பாட்டிற்கும் வேறுபாடு தெரியாமல் வளர்ந்து வருகின்ற நாகரிக மோகம் பெண்களிடமிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை உண்மையாய் உணர்ந்து பாடுகிறுர்

'' இஸ்லாமியா கல்லூரி மாணவர் வை. பெரியதம்பி. ''

'' வருங்காலத் தமிழச்சி கேட்ட ருள்க
வாய்மீறும வார்த்தைக்குப் பொறுத்தருள்க
வெறுங்காலால் தரைமீது நடந்தவர்நாம்
வெளிநாட்டார் குதிசெருப்பில் வீழ்ந்திடாதே''

என்று பாடும் இவர் தொடங்கும்போது 'கேட்டருள்க' என நயமாய் உரைத்து 'குதிசெருப்பில் வீழ்ந்திடாதே' என்னும்போது, நடக்கத் தெரியாமல், நாகரிகமே விழைந்து நாட்டியமாடி அக்காலுயர்ந்த செருப்பில் கால்களை மாட்டிக் கீழே விழாதே! என்ற அறிவுரை நகைச்சுவையோடு அமைகின்றது. மேலும் தமிழ்ப் பண்பாட்டின்மீது கவிஞர்க்குள்ள பற்றும் தெரிகின்றது. பல விதமாய் நாகரிகப் பெண்கள் போக்கினைக் கண்டிக்கும் இவர் இக் கவிதையின் இறுதியில்,

'' மறத்தமிழ்ப் பெண்மானே! மனங்கொள் நீதான்
வருங்கால நம்பண்புக் காணி வேரே!''

என்று பாடி முடிப்பதில் எந்த அளவிற்குத் தமிழ்ப் பெண்களை நாட்டின் பண்பிற்குப் பாசறையாக இளைஞர் உலகம் எண்ணிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு ஒரு நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்.

உலகியலை விரும்பித்தான் கவிதை வருமென்பதில்லை. இதைத் துறந்து வாழுகின்ற தன்மை பெற்றவர்கள் தத்துவ ஞானிகள் பிஞ்சில் முதிர்ந்து பழுக்கும் துறவுக் கவிகளும் இந்த மாணவ உலகில் இல்லாமலில்லை. தன்னைப்பற்றித் தானே கவலைப்படாதபோது இந்த உலகம் ஏன் கவலைப்படவேண்டும் என்ற தாயுமானவர், இராமலிங்கர் போன்றவர் வரிசையில் சேருகின்றார் ஒருவர் :

"தொடராத முடிவைத்தான் தேடு கின்றேன்
தொடர்கதையாய்ப் போவதெங்கே! பொய்யு டம்பின்
நடிப்பிற்கு நேரமில்லை! உலக மென்னை
நசுக்கட்டும் மறக்கட்டும் தொல்லை இல்லை,
துடிப்பற்று மௌனியாய் இதய மூச்சு
துடிக்காத அமைதிதரும் மரண நாட்டின்
முடியரசாய் ஆகின்றேன் உலக மென்னை
மூடட்டும் பாடட்டும் கவலை இல்லை"

— செ. பன்னீர்செல்வம், இசுலாமியா கல்லூரி,
வாணியம்பாடி.

ஞானிகளது சிந்தாந்தம் நாகரிக இளைஞர்கள் வட்டத்தில் இகழ்ச்சிக்குரியதாக உள்ளதே என்று மறுகும் சான்றோர்கள் மன நிறைவைப் பெறுகின்றார்கள் இக்கவிதைமூலம் எனலாம்

இரு வேறாய் இருக்கும் உலகத்தியற்கையைப்பற்றி வள்ளுவர் போன்றோர்கூட 'ஏன்?' என்ற வினைக்குறி போட்டுச் சென்றுள்ளனர் படைத்தோனுக்குச் சாபமிடுவதைத் தவிர அவர்கள் வேறொன்றும் செய்ய முடியவில்லை. இன்றைய மாணவர் ஒருவரும் அதை எண்ணிப் பார்த்துப் பெருமூச்சுவிடுகிறார்.

"பாடிவரும் தென்றலினைப் படைத்தாய் நன்று;
பாய்ந்துவரும் புயலினையும் படைத்தாய் நன்றோ?
ஓடிவரும் எழில்நதியைப் படைத்தாய் ஆனால்
ஒலிக்கின்ற பேரிடியும் தேவை தானா?"

எனக் கேள்விகளைக் கேட்டு,

'சிற்பத்தில் குறையென்றால் செய்தோன் குற்றம்
செய்தவனும் நீயென்றால் உன்மேல் குற்றம்"

என்று இறைவன் மேலே குற்றத்தைச் சுமத்தும் இவர் துணிவைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. இவர் உதகை அரசினர் கல்லூரி ஏ நடராசன்.

இந்திய நாட்டில் பெண்களது வீரம் பெயர் பெற்ற ஒன்று. அதிலும் தமிழ் நாட்டு வீரப் பெண்களைப் பற்றிச் சொன்னால் வியப்பு எல்லைக்கடங்காது. "பெற்ற மகன் போர்க்களத்தில் இருப்பான்; அவனை ஈன்ற வயிறு இது" என்று மிகச் சாதாரணமாகப் பேசும் புறநானூற்று வீரத்தன்மை இன்றைய பெண்களிடம் இருப்பதில் நாம் பெருமைப் படத்தான் செய்கிறோம்.

"கயமைக்குத் துணைபோகும் கூட்டம் — நாட்டில்
காடழிப்புப் போலாக வேண்டும்!"

எனக் குறுகிய மனப்பான்மை கண்டு குமுறும் எரிமலையை உள்ளடக்கி எழும் கவிதைப் பெருக்குப் பெண்கள் கூட்டத்தில் எழுகின்றதைக் காணுகையில் பெருமிதங்கலந்த வியப்பு மேலிடுகிறது. இந்தக் கவிதையின் முடிவில்,

"எவராகில் யாராகில் என்ன — எனக்கு
எல்லாமும் பணிந்தாக வேண்டும்
என்கின்ற மூடர்களின் கூட்டம் — எனக்கு
எரிந்தார்ந்த சுடுகாட்டுச் சாம்பல்"

என முழக்குவது புரட்சிக் கனலைத் தெறிக்கின்ற தன்மையதாய் உள்ளது மாயூரம் பெண்கள் அரசினர் கலைக் கல்லூரியைச் சார்ந்த செல்வி B. இராணி இவ்வெண்ணத்தைத் தம் கவிதையில் காட்டியுள்ளார்.

யாப்பிலக்கணத்திலேயே ஊறி எழுதும் கவிதைகளைத்தான் மாணவர்கள் விரும்புகின்றார்கள் என்பதில்லை. பாரதியார் போன்ற பெருங் கவிஞர்கள் சென்ற வசன கவிதையிலும் இவர்கள் கண்ணோட்டம் செல்லுகின்றது. இதைப் போன்ற கவிதைகளில் உணர்ச்சி ஒன்றே உயிர்நிலை. அதுவே இக் கவிதைகளை வாழவைக்கும். புதுச் சொல்லாக்கத்திற்கு இதில் இடமுண்டு. உருவகமாகவே இக்கவிதைகள் பெரும்பாலும் பாடப்படுகின்றன காலத்தை வென்று இவைகள் வாழுமென்றோ, பலரது பாராட்டுதல்களை இவை பெறுமென்றோ கூறுவதிற்கில்லை. ஏனெனில் பாரதியார் கவிதைகளில் ஒரு வரம்புக் குட்பட்ட கவிகள் பெறும் செல்வாக்கினை அவர் வசன கவிதைகள் பெருமையைக் காணுகின்றோம் ஆயின் பாரதியார் இத்துறையை அறிமுகப்படுத்தியது ஒரு மாற்றத்திற்கேயன்றி அவர் இத்துறை வளர விரும்பினர் எனச் சொல்ல முடியாது.

அதிராமபட்டினம் காதர் மொய்தீன் கல்லூரி மாணவர் மெ. செல்லப்பன் வசன கவிதை ஒன்றை வழங்குகிறார்.

"பொங்கி யெழும் அலைகடல்
எங்களது சிறிய ஓடம்
எங்கும் கரையைக் காணோம்
....
வாடிய மலர் சருகாமோ?
வற்றிய காம்பு விறகாமோ?
எழில் மலர் எருவாமோ?
எங்கள் கண்ணீர் சுவையாமோ?

வெறும் உணர்ச்சிச் சொற்கள் கவிதைக்கு உயிரூட்டுகின்றன. எனினும் பிற கவிதை போல் ஆழ்ந்த அனுபவத்தைத் தருவதில் இவை போன்றவை தோல்வியடைகின்றன என்றே கூறலாம்

நகைச் சுவை இல்லை என்றால் வாழ்வே சுவையில்லை. கவிதையில் நகைப்புணர்ச்சி யூட்டுவது மிக எளிதல்ல. அதிலும் திறமை காட்டுகின்றார் கோவை கிருஷ்ணம்மாள் கல்லூரியைச் சேர்ந்த செல்வி வி. கமலம், ஒரு பெரும் தொல்லை தருவது இந்தப் பேருந்து அந்தத் தொல்லையைக் கவியாக்கிக் காட்டும் போதுதான் எத்தனை நகைப்புணர்ச்சி ததும்புகிறது! கூட்டம் தாளாது வரும் பேருந்தைக் கண்டு.

"படிமேலே நின்றேனும் கண்ணம்மா — நான்
பத்துக் கெல்லாம் போயிடோணும் கண்ணம்மா!
பையைக் கவனம் பண்ணிக்கோணும் கண்ணம்மா — நெளிந்து
பக்குவமாய் இறங்க வேணும் கண்ணம்மா!"

என்கின்றபோது 'பக்குவமாய்' என்று பண்பாட்டுத் காப்பு எவ்வளவு பெண்களுக்குத் தேவை என்பதை உணர்த்திவிடும் இவர்,

"கையும் காலும் இருக்குதான்னு கண்ணம்மா — கொஞ்சம்
கடைசியிலே பார்த்துக் கோணும் கண்ணம்மா"

எனக் கூறுகையில் நம்மையறியாமல் சிரித்து விடுகின்றோம். அன்றாட வாழ்வுச் சிக்கல்களைப் படம் பிடித்துச் காட்டுவதிலும் வல்லவர்கள் நாங்கள் என்பதையே இக் கவிதை காட்டுகிறது.

மாணவர் கவியுலகில் எவ்வளவோ கற்பனைக்கு இடமுண்டு. எதிர்காலச் சிந்தனையும், நிகழ்கால நடைமுறையும், இறந்த

காலப் பழமையும் கலந்து உலவும் உலகம் அவர்கள் உலகம். எனவே பல திறப்பட்ட உணர்ச்சிகட்கு அங்கே இடமுண்டு.

" நாணற்புல் வளைந்தாலும் பின் நிமிரும் — இந்த
நாட்டடிமை மானிடர்கூன் நிமிர்வதென்றோ ? "

என அடிமை உணர்ச்சியைச் சாடியும்,

" கணவனைத் தெய்வமென் றோது — அவன்
காலடியே உன்வீடு "

என்று நம் பண்பாட்டைக் காப்பாற்றும் பெண்கள் குரல் ஒலித்தும்,

" ஆசானை மதித்தவரின் அகங்குளிர நடப்பேன்
அறிவுடையோர் சொல்வதெலாம் அகத்தினிலே
கொள்வேன் "

எனச் சூளுரைத்தும் எழுகின்ற மாணவர் கவிதைகளில் பாராட்டத் தகுந்தன இல்லையென ஒதுக்கிவிட முடியாது.

" சின்ன சின்ன நடையிடும்
செல்லக் குழந்தை நம்மிடம்
சொன்ன சொற்கள் யாவுமே
தூய தேன் துளிகளாம் "
— ச. கோபாலன், அரசினர் கலைக் கல்லூரி,
கிருட்டினகிரி.

என்பவை போலக் குழந்தைக் கவிதைகளும் அவர்களிடம் பிறக்கின்றன.

எங்கெல்லாம் திறமையுள்ளதோ அங்கெல்லாம் சென்று பாராட்டுதல் மனிதப் பண்பு. வருங்கால இலக்கிய உலகிற்குப் பெரும் அங்கங்களே இன்றைய மாணவச் செல்வங்கள். அவர்களது ஊக்கம் ஒன்றே நம் ஆக்கம். அவர்களது உணர்ச்சியை இன்றைய தமிழ்ப் புலவர்கள் மதிப்பார்களாக மாணவர்கள் தம் கவிதைகளில் இலக்கண வரம்பை வைத்துக்கொள்வது சிறகு முளைக்காத குஞ்சு தாயுடன் கூட்டில் இருப்பது போல. எல்லை வகுத்துக் கவிகள் எழுதிப் பழகவேண்டும். புதுச் சொல்லாக்கம். புது உவமைகள் போன்றவற்றைப் படைத்துக் காட்டினால் இவர்கள் கவிதைக்கு எதிர்ப்புச் சொல்வார் இரார். வளர்ந்துவரும் சமுதாயத்திற்குத் தேவையான மாணவர் கவியுள்ளம் வளர்க !

அறமும் ஆற்றலும்

திரு. த. பொ. தண்டபாணி,
ஓய்வு பெற்ற ஆசிரியர், பாண்டிச்சேரி.

சென்ற இதழின் தொடர்ச்சி.

"அறம்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇ பொய்த்து நகை."

எனவே புண்ணியம் எய்யாத மக்கள் கூட புறம்பழித்துப் பொய்யான சிரிப்பில் ஈடுபடாமல் இருப்பாரேல் நல்ல கதியோடு இம்மை மறுமை சிறப்புக்களைப் பெறுவர் என்று வள்ளுவர் கூறுகிறார்

தருமத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டின் தரும சாத்திரங்களைப் படித்தல் வேண்டும். பெரியோர்கள் தருமத்தை எவ்வாறு கையாண்டார்கள் என்றும் தெரிந்து கொள்ளல் வேண்டும். தருமத்தின் நுட்பம் நன்கு விளங்க வேண்டும். அவாவின்மை, பிறர்க்குக் கைம்மாறு கருதாது கொடை வள்ளல்கள் போன்று வழங்கல்,

எதுபோய் எதுவரினும் நடுநிலை நின்றும் விலகாது நிற்றல், சுக துக்கங்களின் மேடு பள்ளங்களில் முறையே ஏறிமகிழ்தலும், வீழ்ந்து அயர்தலும் ஆயவை செய்யாதிருத்தல் முதலிய செயல்கள் எல்லாம் தருமத்தின் நுட்பத்தை விளக்குவனவாகும். இறைவன் திருவடி நீழல் ஒன்றே மெய்யென்ற திடசித்தத்தோடு கூடிய உலக வாதனைகளில் தோயாத மனத்தோடு வாழ்தல் அறத்தின் நுட்பத்தைத்தெரிந்து கொண்டமைக்கு ஓர் எடுத்துக் காட்டெனக. அறன் அறிதல் எளிதுபோல் தோன்றும். அநுபவத்தில் ஏற்படும் சங்கடங்களையும் சாதனைகளையும் சமாளித்துக் கொள்ளும் நேரத்தில் எத்தனையோ சோதனைகள் நம்மைக் கவிழ்க்கப் புடைசூழ்ந்து நின்று வேடிக்கைப் பார்க்கும். அவற்றைக் கண்டு மயங்காது செல்லல் அறத்தின் நுட்பத்திற்கு மற்றோர் சான்றாகும். எனவே அறத்தின் நுட்பம் ஞானத்தாலும், வயதாலும், சீலத்தாலும் வளர்கிற தென்னலாம். ஞானம், வயது சீலம் இம்மூன்றன் உச்சியில் முதிர்ந்து நின்ற தவ சிரேட்டர்களைத் துணை கொள்ளலும் அறத்தின் பண்பினை ஆராய்ந்து நுகர்வதற்குப் போதிய துணை செய்யும். இக்கருத்தினையே வள்ளுவர்

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்"

எனப் பொருட் பாலில் "பெரியாரைத் துணைக்கோடல்" என்ற தலைப்பில் கூறலாயினர்.

உலக மக்கள் ஈடேறும் வண்ணம் இறைவன் இனம், மதம் நிறம், என்ற பல பாகுபாடுகளைத் தோற்றுவித்தான் போலும்! ஒவ்வோர் ஆணுக்கும் ஒவ்வோர் பெண் தேவை. அவ்வவ் வாணும் பெண்ணும் ஒன்று கூடி வாழ்தல் வேண்டும். ஒன்று கூடியபின் பிரியாதிருத்தல் வேண்டும். பிரியாதிருக்க வேண்டின் இருவரிடையேயும் முழுநேயம் வளர்தல் இன்றியமையாதது. முழுநேய வளர்ச்சிக்கு அவனும் அவளும் தருமத்தை நன்கு தெரிந்துகொள்ளல் வேண்டும். தருமம் வேறு அவர்கள் கூடி வாழும் இல்வாழ்க்கை வேறு என்று தோன்ருதிருக்கவேண்டும். பிறரும் அதனைப் பழிக்காதிருக்க வேண்டும். அறத்தின் வீழ்ச்சி யில் பழிப்பு முளைக்கிறது. தத்தமக்குற்ற தருமத்திற்கேற்ப. ஆண் பெண் இணைப்பு அல்லது திருமணம் நிகழின் பழிப்பு என்பதே நிகழாது விதியும் மதியும் சேர்ந்து கொடுத்தூட்டும் வல்வினை அல்லது நல்வினை யூட்டக் கிடைக்கும் இல்வாழ்வும் உண்டு. அங்கேயும் பிறர் பழிப்புக்கிடமின்றி வாழ்தல் தலை சிறந்தது. அது கருதியே திருவள்ளுவர்

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன் பழிப்பது இல் ஆயின் நன்று"

எனக் கூறியிருக்கின்ருர்.

இல்லாளொடு கூடி வாழ்தல் இல்லறம் என்கிரும். இல்லா ளின் பண்பு இலக்கியங்களில் நன்கு கூறப்பட்டுள்ளது. மாதவி போன்ற பொதுமகளிர் கூட ஓர் தலைசிறந்த இல்லாள் என்க. இல்லத்தில் கணவனையே கதியெனச் சூழ்ந்துகொண்டு அவ னையே தன் தலைவனுகவும் கடவுளாகவும் கும்பிட்டு வாழ்தல் இல்லறம் என்பர் ஆன்ருேர். இவ்வாறு ஒருவனுக்கு ஒருத்தி யாக வாழும் தூய வாழ்க்கையில் ஏகதேச வழுக்கள் அமைவதை யும் நாம் காண்கிருேம். கணவனே அல்லது மனைவியோ தலை எழுத்தால், தான்தான் செய்த வினைக்கேற்ப ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியவும் நேரிடுகிறது விட்டுப் பிரிந்தவர்கள் தனித்தனியே தங்கட்கு மீண்டும் ஓர் பெண்ணையோ அல்லது ஆணையோ தேர்ந்து கொண்டு இல்லறம் நடாத்துகின்றனர். அவ்வாழ்வும் ஓர் நல்ல இல்லற வாழ்வே என்க.

எண்ணத்தில் ஒருவர்க்கொருவர் நேயர்களாக இல்லா விட்டால் அவர்கள் நடத்தும் இல்லறத் தோணி நன்கு இயங்காதென்க. இன்னும் இந்து மதத்தின் கீழ் நடந்துவரும் காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் நேருக்கு நேரே சந்தித்து மாயப் புணர்ச்சி முதலிய பல மகிழ்ச்சிக்குரிய செயல்களைச் செய்து தங்கள் இருவர் மனத்தையும் ஒன்ருய்ப் பிணைத்துக் கொண்டு இல்லறம் நடாத்துவதையும் காண்கிருேம். அதுவும் மிக நல்ல இல்லறமேயாம். இன்னுஞ் சில இடங்களில் கணவனும் மனைவியும் தனித்துப் பிறழ்ந்தாற்றும் சேட்டைகளைப் பொறுத்தும் ஆமோதித்தும் மன நிம்மதியோடும் இல்லறம் நடாத்துகின்றனர். அவ்வாழ்வும் ஆற்றல் நிறைந்த இல்லறமே என்க. உலகப் பொதுச் சமயக் கண்ணேடு நோக்கின் மேனுடுகளில் இல்லறத்தைக் காலக் கெடுவுக்கும் கட்டுப்படுத்திவிட்டார்கள். ஒருவர் நடாத்தும் இல்லற வாழ்வில் சில முறையோ பல முறையோ தலைவியை அல்லது தலைவனை மாற்றிக்கொள்ளும் உரிமையும் அவர்களுக்குண்டென்க.

சட்டக் கண்கொண்டும், சமத்துவ நோக்கிலும், சுதந்தரப் போக்கிலும் இன்ப ஊற்றை முகந்து கொண்டு உண்டு வாழ வேண்டும் என்கின்றனர் ஆன்ருேரின் மேம்பட்டோர்கள். இந்தியாவில் இம் மேலாய முறையானது வாழ்க்கையில் தமிழர் நாகரிகம் தலைசிறந்து விளங்கிய போது இருந்ததென்பதற்கு ஆதாரங்கள் நிறையக் கிடைக்கின்றன. இப்போதும் சிற்சில இடங்களில் மாணிக்கக் கற்கள்போல் பொதிந்து காட்சியளித்து வருகிறது. இவ்வாறெல்லாம் மாறியியங்கும் ஆற்றல் படைத்த இல்லறத்தையே நல்லறம் என்று கூறிய வள்ளுவர் அவ்வாழ்க்கையின் நடைமுறைகளிலும் அன்பும் அறமும் கலந்து மிளிர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்ருர்.

> "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
> பண்பும் பயனும் அது"

என்பதே அக்குறள். மேலும் அக்குறளில் இல்லறத்தின் பயனும் கூறப்பட்டுள்ளது. இல்லறத்தின் பயன் என்ன? வாழையடி வாழையாக வருகின்ற சந்ததியே பயனும். அது ஆண் சந்ததியாயிருந்தாலும் சரி; பெண் சந்ததியாய் இருந்தாலும் சரி; ஆகக் கூடி இல்லற வாழ்வில் புத்திர சந்தானம் அவசியம் வேண்டுமென வள்ளுவர் நினைத்துக் கூறியுள்ளார்.

தருமத்தைப் பற்றி இதுவரை அகப்பொருள் ஆராய்ச்சியே வள்ளுவர் செய்து வருகிறார். புறமாக அதன் பலா பலனைத் தெரிவிக்குமுன் தரும சிந்தையோர்கள் வழுக்கியும் அல்லது தவறு செய்ய வற்புறுத்தும் வல்வினையுற்றபோதும் புல்லிய செயல்களைப் புரியவே மாட்டார்கள் என்க. தாழ்ந்த செயல்களான புறங்கூறல் பிறன்மனை விழைதல், சூதாடல், பொய்யுரைத்தல் போன்றவற்றை இல்லறத்தில் இருக்கும் ஒருவர் செய்யாதிருந்துவிட்டால், அவர் முற்றிலும் அறப் பண்புகளை எல்லாம் ஒருங்கே தனது மனத்திடை வைத்துப் பேணுபவர் என்றே கூறலாம். ஏகதேச வழுக்களாக அக்குற்றங்கள் ஒருவரது வாழ்நாளில் அமையுமேல் அவரது அறந்தோய்ந்த நல்வாழ்வில் தோன்றிய குறைகளே என்க. இக்கருத்தினையே வள்ளுவர்

“ அறன் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்
புன்மையால் காணப் படும் ”

என்ற குறளில நன்கு விளங்கும் பொருட்டுக் கூறியமை ஊன்றிக் கவனிப்பீர்களாக

இத்தகைய தருமக் கொள்கைகளை மனத்திடை அமர்த்தி அதன் காரணமாக நமது மனம் செம்மையுறின், அம் மனோ பீடத்தினின்றும் உதித்து ஓங்கிப் படர்ந்து கதிர்விட்டு ஒளி காட்டிச் செல்லும் நமது எண்ணங்களும் நற்செய்கைகளும் தருகின்ற “ஒன்றே குலம், ஒருவனே தேவன் நன்றே இந் நானிலம் வாழ்க ” என்பனுதிய பல நல்ல விளைவுகள் ஒன்றன் பின் ஒன்ருய்த் தோன்றியவண்ணம் இருக்கக் காணலாம் அணு குண்டு ஆராய்ச்சியின் விளைவால் தற்போது ஏற்பட்டுள்ள நடுக்கமும், மனித சமுதாயத்தையே விழுங்கக்கூடிய வானவீதியில் அதிக உச்சியில் நடமாடும் செயற்கைச் சந்திரனால் ஏற்படுகின்ற கேடுகளும் பிறவும் தருமத்தை அல்லது தருமக் கொள்கைகளை முற்றிலும் மனத்திடை வைத்துப் பூசித் தொழுகாமையாலேயே உண்டாகின்றன. அறப் பண்புகளை மறக்குந்தோறும் கேடுகள், நலிவுகள், நோய்கள், பீடைகள் ஆயபிற வெல்லாவித இன்னல்களும் தோன்றுகின்றன. இதனையே

“ அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலினூங்கு இல்லை கேடு ”

என்ற குறளால் நனி விளக்குவாராயினர்.

(தொடரும்)

இலங்கைத் தமிழர் இன்னல்தீர

புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

கடலில் மிதப்பதுபோல் காட்சியளிக்கும் இலங்கைத் தீவில் வாழும் தமிழர்கள் உண்மையிலேயே கண்ணீர்க் கடலில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். "கடல் கடந்து சென்ற தமிழர்கள் விட்ட கண்ணீர்தான் கடல்நீர் உப்பாக இருப்பதற்குக் காரணம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை துயரத்துடன் கூறியது துண்டு. நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டு எழுச்சி மிகுந்த பாடல்கள் பலவற்றைப் பாடிய தேசீய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் அயல் நாடுகளில் வாழும் தமிழர்கள் துயரம்பற்றி மனம் நொந்து பாடிய பாட்டு பின்வருமாறு.

"தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளிய
தமிழச் சாதி தடியடி யுண்டும்,
காலுதை யுண்டும், கயிற்றடி யுண்டும்,
வருந்திடும் செய்தியும், மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறுது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை வுள்ளதம்
நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்
இஃதெலாம் கேட்டும் என்னுளம் அழிந்திலேன்"

உலகத்து மக்கள் ஒருகாலம் துன்பமுற்றால் மற்றொரு காலம் இன்பமாக வாழ்வதுண்டு. ஆனால் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு என்றைக்குமே விடிவு காலம் இல்லையோ என்று எண்ணத்தக்க வகையில் அவர்கள் காலமெல்லாம் கண்ணீர் சிந்தி வாடுகிறார்கள். தமிழ் நாடும், இந்திய நாட்டின் ஏனைய பகுதிகளும் வெள்ளையர்களுக்கு அடிமைப்பட்டு வாடிய நேரத்தில் வெளிநாட்டில் வாழ்ந்த தமிழர்கள் ஒளி குன்றி வாடியதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தியா விடுதலைபெற்று இருபத்தாறு ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பிறகும் வெளி நாட்டில் வாழும் தமிழர்களின் இன்னல் இன்னும் நீங்காதிருப் பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுமட்டுமன்று.

இந்தியா விடுதலைபெற்ற பிறகுதான் அயல் நாட்டுத் தமிழர் துயரம் ஒன்றுக்குப் பத்தாக வளர்ந்து அவர்களை வாட்டுகிறது என்பதனையும் நாம் நன்குணர முடிகிறது. இந்தியா விடுதலை பெற்றதற்குப் பிறகுதான் பர்மாவிலிருந்து தமிழர்கள் கட்டிய துணியோடும் ஒட்டிய வயிற்றோடும் தமிழ் நாட்டுக்கு ஓடிவர நேர்ந்தது. இலங்கையிலிருந்து நூறாயிரக் கணக்கான தமிழர்கள் "நாடற்றோர்" என்னும் பெயர் பெற்றுத் தமிழ்நாடு நோக்கி வந்ததும் இந்தியா விடுதலை பெற்றதற்குப் பிறகுதான்.

சீனர்கள் உலகின் எல்லா நாடுகளிலும் சென்று குடியேறி வாழ்கின்றனர். எந்த ஒரு நாட்டிலிருந்தாவது சீனர்கள் விரட்டப்பட்டதாக நாம் கேள்விப்பட்டதுண்டா? இந்தியர்கள் மட்டும் - குறிப்பாகத் தமிழர்கள் மட்டும் வெளிநாடுகளிலிருந்து ஓட ஓட விரட்டப்படுகின்றனரே அது ஏன்?

தறுக்கினாற் பிறரே சத்தார்
தமிழன்பால் - என்நாட்டான் பால்
வெறுப்புறு குற்றஞ் செய்தார்
ஆதலால் விரைந்தன் னாரை
நொறுக்கினர் முதுகெ லும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்தசொல் கேட்டின் பத்திற்
குதிக்கும்நாள் எந்த நாளோ"

என்று பாவேந்தர் பாரதிதாசன் கண்ட கனவு இன்னும் நனவாகாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இந்திய அரசின் வெளி நாட்டுக் கொள்கையே இதற்கெல்லாம் மூலகாரணம். ஆப்பிரிக்காவில் உள்ள உகாண்டா என்னும் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசியர்களில் மிகப் பெரும்பாலோர் வட இந்தியர்கள் என்பதனால் இந்திய அரசு துடித்தெழுந்து ஆவன செய்ய முற்பட்டது போல் வெளிநாட்டிலிருந்து தமிழர்கள் விரட்டப்படும் போது துடித்தெழுந்து ஆவன செய்வதில்லை; வாய்ச்சொல் அளவில் கூடக் கண்டனம் தெரிவிப்பதில்லை. இந்தியாவைச் சுற்றியுள்ள சின்னஞ்சிறு நாடுகளின் நட்புறவு வேண்டும் என்பதற்காக அந்த நாடுகளில் தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படும் போதெல்லாம் வாய்மூடி நிற்கிறது இந்திய அரசு. தமிழர்கள் கொடுமைப் படுத்தப்பட்டால் இந்திய அரசு சினங்கொள்ளும் என்னும் நிலைமையிருக்குமானால் இந்தியாவின் அருளை எதிர்நோக்கி நிற்கும் இலங்கை பர்மா முதலிய நாடுகள் தமிழர்க்குக் கொடுமை செய்யக் கனவிலும் நினைக்கமாட்டா. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இலங்கைத் தமிழர் நிலை பற்றி இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் பேசப் போவதாக அறிவித்த அளவிலேயே இலங்கை அரசு கவலை

யடைவதாகச் செய்தி வருகிறது. ஆகவே, தமிழர்கள் யாவரும் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டுக் குரலெழுப்பினால்— இந்திய அரசு புருவத்தைச் சிறிது நெரிக்குமானால், இலங்கைத் தமிழர் துயரம் ஒரே நாளில் தீர்ந்துபோகும்.

இலங்கைத் தமிழர் துயரம் என்பது இலங்கையின் உள் நாட்டுச் சிக்கல் என்ற நிலைமை கடந்து விட்டது. இப்போது அஃது உலகத்து நாடுகள் தலையிட்டுத் தீரவேண்டிய மனித உரிமைச் சிக்கலாக மாறிவிட்டது.

இலங்கையில் சிங்களர், தமிழர் என்று இரண்டு இனத்தவர் வாழ்கின்றனர். பெரும்பான்மையினமான சிங்கள இனம் சிறுபான்மையினமான தமிழர் இனத்தை அடிமையினம்போல் நடத்த முற்படுகிறது. சிங்கள மொழி மட்டுமே ஆட்சிமொழியாக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகைகளிலும் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வருகின்றனர்

சிங்கள இனத்தவரோடு எல்லா வகையிலும் தமிழர்களுக்கு ஒத்த உரிமை வேண்டும் என்று அமைதியான முறையில் தமிழர்கள் போராடிப் பார்த்துவிட்டனர். இப்போது வேறு வழியில்லாத நிலைமையில் இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கு மாநிலங்கள் இரண்டையும் சேர்த்துத் தனி நாடு ஆக்கவேண்டும் என்று கோரிக் காந்தி வழியில் அமைதியான முறையில் போராட்டம் நடத்திவருகின்றனர். சுவிட்சர்லாந்தில் உள்ள உலக நாடுகள் மன்றத்தின் மனித உரிமைப் பாதுகாப்புக் குழுவிற்கு இலங்கைத் தமிழர்கள் விண்ணப்பம் அனுப்பியுள்ளனர் அக் குழுவும் இலங்கைத் தமிழர் உரிமை குறித்து ஆய்வு நடத்துவதாகக் கூறியுள்ளது

இந்நிலையில் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடக்கூடாது என்று சொல்லும் வாதம் பொருந்தாது. பாக்கிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்த கிழக்கு வங்காளத்தில் இந்தியா தலையிட்டதற்கு எவ்வளவு நியாயமான காரணங்கள் உண்டோ அவ்வளவு நியாயமான காரணங்கள் இலங்கையின் உள் விவகாரத்தில் இந்தியா தலையிடவும் உண்டு. ஆதலின், உரிமை இழந்து வாழ்வதிலும் உரிமைக்காகப் போராடி மாள்வது மேல் என்னும் உணர்வோடு போராடிவரும் இலங்கைத் தமிழர் நல்வாழ்வுக்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுவது இந்திய அரசின் பொறுப்பாகும். இந்திய அரசு தன் பொறுப்பை உணருமாறு செய்யவேண்டுவது தமிழர்களின் பொறுப்பாகும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

வாழ்க தமிழினம்!

திருக்கற்குடி

பேராசிரியர் சி. கோவிந்தராசனுர்.
பழம்பொருள், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், கரந்தை.

சோழ நாட்டின பழைய தலைநகரங்களுள் ஒன்றுனதும், காவிரியின் தென்கரையிலமைந்ததுமான வரலாற்றுச் சிறப்புடைய உறையூருக்குத் தென்மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ள சிற்றூரே 'கற்குடி' என்னும் பெயர் பெற்றதாகும். இவ்வூர் இன்று 'உய்யக்கொண்டான் திருமலை' என்று வழங்கப் பெற்று வருகின்றது.

ஊரின் பெரும்பகுதி பாறைத் தளமாக வளர்ந்து பரந்து நிற்கும் இயற்கையாக இருக்கின்றது. பாறைத் தளத்தின்மீது பழங்காலத்தில் குறிஞ்சி நிலப் பழங்குடி மக்களாகிய குறவர் வாழ்ந்திருந்தமையால், "கற்குடி" என்னும் பெயர் பெறுவதாயிற்று ★ இவ்வாறு அக்காலத்தில் இப்பகுதி குறிஞ்சி நிலமாகவே காட்சியளித்ததென்பதை கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியினராகிய திருஞானசம்பந்தர், இங்குள்ள கோயிலிலெழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது பாடிய பதிகத்தில்,

"வேடர் புனத்திடை யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங் கற்குடி"
"சந்தின் திண்சிறையால், தினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங் கற்குடி"

என்றெலாம் கூறியுள்ள வியல்பினுல் நன்கு உணரலாகும்.

மற்றும், ஒரு உவாவின்போது, குறவர் தம் மனைவியருடனும், மக்களுடனும், கற்குடியாகும் இயற்கைப் பாறைத் தளத்தின்மீது நின்றபோது, குறத்தியர் தம் மகவுகட்கு நிறைமதி காட்டிக் கொஞ்சிக்கொண்டிருப்பதையும், அம் மகவுகள் தம் பேதைமையால் மதியைப் பிடிக்க முயலுவதையும் கண்ட திருஞானசம்பந்தர்,

"சங்கமதார் தங்கையில் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங் கற்குடி"

★ குன்றக்குடி — என்ற ஊர்ப்பெயரும் இப்பொருள் பற்றியே குறிச்கப்பெற்றதாகும்.

என்று கற்குடியில் குறத்தியர்பால் நிகழ்ந்த நிகழ்ச்சியைத் தாம் கண்டவாறே பதிகத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளமை, குறிஞ்சி நில வியற்கையை நன்கு விளக்குவதாகும்.

இவ்வாறு, மலைவளம் பொருந்தியிருந்த கற்குடியில். பாறைப் பகுதிகளைச் சூழ்ந்திருந்த காடுகள், மக்களின் வளர்ச்சிக்கேற்ப மருதநிலமாகத் திருத்தப்பட்டு, குறிஞ்சியில் மருதம் மயங்கிய தோற்றமாக இன்று காட்சியளிக்கின்றது, இந்நிலை எக்காலத்தில் ஏற்பட்டதென்பதை ஆராயுங்கால், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சைவநலம் பெருக்கிய சுந்தரர். இக்கற்குடி மீதமர்ந்த பெருமானைப் பாடும்பொழுது,

'' கரையாரும் வயல்சூழ் திருக்கற்குடி '', '' கரும்பாரும் வயல் சூழ் திருக்கற்குடி '', கடியார் பூம்பொழில் சூழ் திருக்கற்குடி'' என்றெலாம் விளக்கமாகக் கூறுவதிலிருந்து, மருதநிலச் சூழலாக சுந்தரர் காலத்திற்குச் சற்று முற்பட்டதாகவே. கற்குடியைச் சூழ்ந்திருந்த காடுகள் மாற்றப்பட்டிருந்தன என்பது தெளிவாகும்.

ஊரின் ஒரு பகுதியாக, ஐம்பதடி அளவில் உயர்ந்து பரந்து நிற்கும் பெரும் பாறையின்மீது கட்டப்பட்டுள்ள கற் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் '' உய்யக்கொண்ட நாயனார் '' என்னும் பெயருடன் விளங்குகின்றார். இப்பெயர் முதல் இராசராசன் காலத்திலேயே கூறப்பெற்றிருந்தது என் பதை. இக்கோயிலிலுள்ள முதல் இராசராசன் கல்வெட்டொன் றின் (457 of 1908) செய்தியால் அறிய முடிகின்றது. முதல் இராசராசனுக்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று, 'உய்யக் கொண்டான்' என்பதாகும்

மற்றும், இக்கற்குடிப் பெருமானுக்கு உச்சிநாதர், முத்தீசர். கற்பகநாதர், உச்சீவநாதசுவாமி, விழுமியார், ஆழ்வார் விழுமியார், விழுமிய நாயனார். கற்குடி விழுமியார், கற்குடி மாமலையார் என்னும் திருப் பெயர்கள் கல்வெட்டுக்களிலும், திருப் பதிகங்களிலும் கூறப்பட்டுள்ளன. இவவாறு, தேவார ஆசிரியர், மூவர் காலத்திலிருந்து பற்பல பெயர்கள் வழங்கப் பெறுவதாயினும், உய்யக் கொண்டார் என்னும் பெயரொன்றே இன்றும் வழக்கில் உள்ளது.

★ பிற்காலச் சோழர் சரித்திரம் — பக்கம் 122,

கற்குடிக் கோயில் — உய்யக் கொண்டார் கோயில் என்றும், இறைவன் திருவகம் அமைந்ததால், பாறை — மலையெனப் போற்றும் திறத்துடன் உய்யக்கொண்டான்திருமலை என்றும். மலையின் பெயரே ஊரிற்கும் பெயராகி நிற்பதுடன், ஊரிற்குக் கிழக்கே தெற்கு வடக்காக ஓடும் வாய்க்கால், உய்யக் கொண்டானுறு என்றும் பெயர் வழங்கப்பெற்று இன்றும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாய்க்கால், மூன்றும் நந்திவர்மபல்லவன் ஆட்சி, சோழ நாட்டில் நிகழ்ந்த (கி பி. 830 — 850) காலத்தில், அவனுடைய சிறப்புப் பெயரால் "வயிரமேகன்" வாய்க்கால் என்று பெயர் பெற்றிருந்தது என்பதை. கற்குடிக் கல்வெட்டுக்களுள் செம்பியன் மாதேவியார் செய்த அறத்தினைக் கூறும் கல்வெட்டும், பல்லவர் ஆட்சியில் இருந்த மயிலைத் திண்ணன் என்பவனல் செய்யப்பெற்ற அறத்தினைக் கூறும் கல்வெட்டும் குறிக்கின்றன.

இத்திருக்கற்குடிக் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களைக் கொண்டு, சோழ மண்டலத்தில் இவ்வூர் குறிக்கப்பெற்றிருந்த வரலாற்றுப் பழமையினை முறையே குறிப்பிடலாகும்.

இரண்டாம் பராந்தகனுடைய ஆட்சியில் (கி பி. 957—970) "தென்கரை பிரமதேயம் நந்திவர்ம மங்கலத்து திருக்கற்குடி" என்றும்,

உத்தம சோழன் ஆட்சியில் (கி. பி. 970 — 985) "தென் கரை பிரமதேயம் நந்திவர்ம மங்கலத்து திருக்கற்குடி' என்றும்,

முதல் இராசராசனுடைய ஆட்சியாண்டு 7-ல் (கி. பி. 992) "தென்கரை பிரமதேயம் நந்திவர்ம மங்கலத்து ஸ்ரீ கற்குடி" என்றும் கூறப்பட்டுள்ளன (இச்செய்திகளால் மூன்றும் நந்திவர்ம பல்லவனது ஆட்சிக்குச் சோழநாடு அடங்கியிருந்தபோது கற்குடி — நந்திவர்ம மங்கலத்துள் ஒரு பகுதியாக இருந்ததென்பதும், அப்பெயரே முதல் இராசராசனுடைய ஆட்சியாண்டு ஏழு வரையிலும் மாற்றமின்றி குறிக்கப்பட்டதென்பதும போதரும்)

பின்னர், முதல் இராசராசனுடைய ஆட்சியாண்டு 27 இல் (கி பி 1012). "பாண்டிய குலாசனி வளநாட்டு இராஜாஸ்ரயச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ கற்குடி" என்றும், ஆட்சியாண்டு 29-இல், (கி. பி. 1014) "கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து பிரமதேயம் ஸ்ரீ ராஜாஸ்ரயச் சதுர்வேதிமங்கலத்து திருக்கற்குடி" என்றும்,

முதல் இராசேந்திரனுடைய ஆட்சியாண்டு 3-இல், (கி. பி. 1015) "கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கற்பிரமதேயம்—திருக்கற்குடி" என்றும் குறிக்கப்பெற்றிருப்பதுடன்

முதற் குலோத்துங்கன் ஆட்சியாண்டு 30-இல் (கி. பி. 1100) "ராஜமகேந்திர வளநாட்டு உறையூர்க் கூற்றத்துப் பிரமதேயமான ராஜாஸ்ரயச் சதுர்வேதி மங்கலத்துத் திருக்கற்குடி" எனவும்,

எம்மண்டலமும் கொண்டருளிய முதல் மாறவர்கன் குலசேகர பாண்டியன் ஆட்சி சோழ நாட்டில் பரவி இருந்தபோது, அவனது ஆட்சியாண்டு 29-இல் (கி பி 1297) "தென் ராஜகம்பீர வளநாட்டு உறையூர்க் கூற்றத்து பிரமதேயம்" எனவும்.

விசயநகரப் பேரரசு தென்னகத்தில் பரவியபோது மண்டலத் தலைவராக இருந்த மல்லிகார்ச்சுனராய மகாராயர் ஆட்சியில், (கி. பி. 1455) கற்குடி — "தென்கரை இராஜ கெம்பீர வளநாட்டு கற்பிரமதேயத்து உய்யக் கொண்டார் திருமலை" என்றும் கூறப்பட்டுள்ளது

இவ்வாறு, கற்குடியின் இருப்பிடம் பற்பல காலங்களில் பெயர் மாற்றம் பெற்றிருப்பதற்குரிய காரணம் ஆராயத் தச்கதாகும்.

சோழ மண்டலத்தின் உட்பெரும் பிரிவாகிய வள நாடுகளில், மண்டலத்தின் மேற்குப் பகுதியிலமைந்த வளநாடுகளின் எல்லைகட்குரிய ஆசறுதிப் ★ பகுதிகளிலொன்றுக, கற்குடியாகிய பாறை நிலப்பகுதி அமைந்திருப்பதால், ஆட்சியாளரின் நாட்டுப் பாகுபாட்டிற்கேற்ப, அவ்வக் காலங்களில் இங்குமங்கும் ஒதுக்கப்பட்டு. பலவளநாட்டின் பகுதியாக குறிக்கப்பட்டிருந்ததென்பதுடன். கூற்றப் பகுதி மட்டும் பெரும்பான்மையும் மாற்றமின்றி எக்காலத்தும் உறையூர்க் கூற்றத்துள் (கற்குடி) அடங்கியிருந்த சிறப்பும் குறிப்பிடத் தக்கதாகும்.

சிலப்பதிகாரத்தில், கவுந்தியடிகளுடன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்கு வழிக்கொண்ட கோவலன் கண்ணகி

★ எல்லைக் கோட்டிலமைந்த திருப்பம்

ஆகியோர். உறையூரில் ஓரிரவு தூங்கிய பின்னர், மதுரையை நோக்கித் தென்முகமாகச் சென்ற வழி, இத் திருக்கற்குடியின் கிழக்கிலேயே அமைந்திருந்ததென்பதை, புகார் முதல் வஞ்சி வரையிற்றொடர்ந்த எனது பழம் பொருள் கல்வெட்டாராய்ச்சி யின் வழியே நன்கு அறிய முடிந்தது

இவ்வாறாக. தமிழகத்தின் பழமைக்கொரு சின்னமாகவும். வரலாற்றுப் புகழிடமாகவும் திருக்கற்குடி சிறந்து நிற்கின்றது

இனி, இத் திருக்கற்குடி விழுமிய தேவர் கோயிலேயும், கோயிலிலுள்ள கல்வெட்டுக்களையும் பற்றிய ஆய்வுரையினைக் கூறுதல் வரலாற்றுச் சிறப்புடையதாகும்,

கோயில். ஐம்பதடி உயர்ந்துள்ள பாறையின்மேல் கற்றளி யாக அமைக்கப்பட்டுள்ளது. பாறையின் பரந்த உச்சித் தளத்தில் கோயில் அமைய, அதனைச் சூழ்ந்திருக்கும் பாறை இறக்கத்தில் வட்டமான மதிலும். அதன் கீழ் தரை மட்டத்தில் சதுரமான பெரிய மதிலும் அமைக்கப்பட்டுள்ளன. மூலவர் இறைவி சந்நிதிகள் மேற்கு நோக்கியதாக அமைக்கப்பட்டுள்ளதாயினும், பிற்காலத்தில் கிழக்கு நோக்கிய அம்மன் சந்நிதியொன்றும் அமைக்கப்பட்டுளது, கோயிலின் மேற்குப் பகுதி மண்டபங்களால் நிறைவிக்கப்பட்ட தோற்றமாகக் காட்சியளிக்கின்றது. இம்மண்டபங்களுள் வடபுறமுள்ள மண்டபம், பாறையில் இயல்பாக அமைந்த நெடிய குகையொன்றினைக் கற்பலகைகளால் மூடிய தளத்தின்மேல் கட்டப்பட்டுள்ளது. பாறையிலும் கோயிலின் பகுதிகளிலும் உள்ள ஒரு சில சின்னங்களைக்கொண்டு ஒரு காலத்தில் சமண முனிவரின் வாழ்விடமாகக் கற்குடி இருந்ததென்பது புலனாகின்றது.

(தொடரும்)

இரங்கற்பா

பாவலரேறு. ச. பாலசுந்தரம்.

1. செந்தமிழ்த்தாய் திருமகவே! சிறந்த தொண்டால்
தென்றமிழைத் திசைபரப்பிச் செழிக்கச் செய்த
வந்தனைக்கும் வாழ்த்தினுக்கும் உரிய செம்மால்!
வாய்மையெனத் தெரிந்ததனை மறைவில் லாமல்
முந்துரைசெய் (து)இந்தியிங்கு வந்த போது
முனைமுகத்து நின்றெதிர்த்து வெற்றி கண்ட
பைந்தமிழ்ப்பே ராசிரிய! எம்மோர் துன்பம்
பாராமல் பிரிதல்தமிழ்ப் பண்போ ஐயா?

2. தொண்டாற்றும் நம்கரந்தைத் தமிழ்ச்சங் கத்தின்
துணையாகத் தமிழ்வளர்த்துக் கற்றோர் எல்லாம்
கொண்டாடப் பணிபுரிந்து தமிழ்த்தாய் ஓங்கும்
கொள்கையன்றிப் பிறநோக்காய் எதிர்ப்பிற் கஞ்சாய்
பண்டாண்ட தமிழினமீண் டாட்சி கொள்ளப்
பைந்தமிழின் தொன்மைவர லாற்றை ஆய்ந்து
கண்டார்நெஞ் சுவப்பூர ஆய்ந்து காட்டிக்
கனிதமிழை வளர்த்தாய் எங்குற்றாய் ஐயா!

3. குறள்நெறியால் தமிழ்ச்சிறப்பைக் குவலயத் தோர்
கோடாமல் அறியும்வகை குறித்துக் காட்டித்
திறல்மிகுதொல் காப்பியத்தைத் துருவி ஆய்ந்து
தென்னகத்தின் தலைமகனும் அறிஞர் அண்ணா
நறுஞ்சுவைசேர் முன்னுரையோ டுலகம் போற்ற
நயமிகுந்த ஆங்கிலத்தில் வெளிப் படுத்தி
அறங்கமழும் வள்ளுவரின் நூற் கருத்தை
அழகொழுகத் தந்தாய்எங் ககன்றாய் ஐயா!

4. அஞ்சாத நெஞ்சுரமும் அருந்தமிழ்த் தாய்க்
காக்கமுறு சிந்தனையும், தமிழ்ப்பண் பாட்டில்
எஞ்சாத பெரும்பற்றும் எழுத்தால் பேச்சால்
இன்றமிழை வளர்க்கின்ற நோக்கும், என்றும்
துஞ்சாத தமிழ்ப்பணியும் பூண்டு வாழ்ந்த
தூயதமிழ் ஆசானே! எங்கள் நெஞ்சம்
மஞ்சாகக் கசிந்துழல மறைந்தாய் அந்தோ!
மணிமுழக்க விரிவுரையா ரிடத்துக் கேட்போம்!

5. உள்ளபடி உனைப்போற்ற வில்லை யென்ற
உவர்ப்பாலே பிரிந்தாயோ? இல்லை இல்லை
கள்ளமிலா உளத்தோன்நீ. பிறர்பா ராட்டைக்
கருதியிரா துன்நெஞ்சம். தெரியும்; ஏனோ
கொள்ளவொணாத் துயர்கூற எம்மைப்பி ரிந்தாம்
கொள்கையினால் இலக்குவனென்(று) ஒளியால் வாழ்ந்த
தள்ளவொணாத் தமிழ்மகனே! பேரா சானே!
தமிழிருக்கும் வரைதமிழர் உளத்திருப்பாய்!

கையறவு

தமிழ்த்தாய்க்குகந்த தனிமகனும் தமிழ் வாழத் தான் வாழ்ந்த தலைமகனுமாய் விளங்கி, தமிழ் நலம் ஓங்கத் தகவோடு திறனாய்ந்து தமிழ் நாடும் அயல் நாடும் அறியச் செய்து, திருக்குறளின் தெளிவுரையும் தென்றமிழின் சீர்த்திமிக்க வரலாறும் எழுதி, தொல்காப்பியத் துணி பொருளாய்ந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆராய்ச்சி உரையால் (டாக்டர்) பண்டாரகர் பட்டம் பெற்றப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பைந்தமிழ்ப் பணியாற்றியதோடு உசுமானியாப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் இருந்து பெரும் பணியாற்றி, குறள் நெறி வாயிலாகத் தமிழின் தனிச்சிறப்பையும் பண்பாட்டையும் பரப்பி, தமிழ் மொழிக்கு அயலாரால் ஊறுநேரும் சூழல் வந்தகாலை முந்திநின்று எதிர்த்து வெற்றிகண்டு, இந்தி எதிர்ப்பில் வீறுநடையிட்டுச் சிறைசென்று செந்தமிழ் காத்து விளங்கிய பெரும் புலவரும், நமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடக்க முதல் தொடர்பு கொண்டு பல்லாற்றானும் துணைபுரிந்தவருமாகிய பேராசிரியர் சி. இலக்குவனார் நம்மை விட்டு மறைந்தமை தமிழ் மொழிக்கும் தமிழகத்திற்கும் பேரிழப்பாகும். இவ்விழப்பு ஆற்றொணாத் துயர்தருவதாகும். அவரை இழந்து வருந்தும் அவர் தம் குடும்பத்தார்க்கும் நண்பர்க்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் உயிர் இறை நிழலில் இன்புறுவதாக